# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

# TAMIL UNIVERSITY, THANJAVUR

## சேர்க்கை விவரக்குறிப்பேடு

## 2017-2018

ஆய்வியல் நிறைஞர் விடுமுறைக்கால தொடர் படிப்பு
(M.Phil., Sequential Programme)

### உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

தொலைபேசி எண்:04362-227089, 226720, 8300826100
தொலைநகலி:04362-226159
தொலைவரி:வளர்தமிழ்,இணையதளம்:www.tamiluniversity.ac.in
மின்னஞ்சல்:tamilpalkalai.pathi@gmail.com

தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்மொழி, பண்பாடு, வரலாறு, கலை, அறிவியல் ஆகியவற்றை ஆய்வு செய்யும் ஓர் உயராய்வு மையமாக விளங்குகின்ற வகையில் 1981ஆம் ஆண்டு செப்தம்பர்த் திங்கள் 15ஆம் நாள் தொடங்கப்பெற்றது. தஞ்சை-திருச்சி நெடுஞ்சாலையில் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் மாவட்ட ஆட்சியர் புதிய அலுலகத்திற்கு அருகில் இயற்கை வளம் சூழ்ந்த எழில் மிகு நிலப்பரப்பில் அமைந்துள்ளது. தொடர்ந்து பல்கலைக்கழக நல்கைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்ற பல்கலைக்கழகமாக இப்பல்கலைக்கழகம் விளங்கிவருகின்றது. இப்பல்கலைக்கழகத்தில் ஐந்து புலங்களில் இருபத்தாறு கல்வித்துறைகள் இயங்கி வருகின்றன.

## துறைகளும் மாணவர் சேர்க்கைக்கான கல்வித்தகுதிகளும்

| வ.எண். | துறையின் பெயர் | சேர்க்கைக்கான கல்வித்தகுதிகள் |
|---|---|---|
| 1. | சிற்பம் | முதுகலை வரலாறு, நுண்கலை, கலை வரலாறு |
| 2. | இசை | முதுகலை இசை , முதுகலை பரதநாட்டியம் |
| 3. | ஓலைச்சுவடி | முதுகலை தமிழ் , முதுகலை வரலாறு |
| 4. | அரிய கையெழுத்துச்சுவடி | முதுகலை தமிழ் அல்லது வரலாறு |
| 5. | கல்வெட்டியல் | முதுகலை வரலாறு, முதுகலை வரலாறு மற்றும் தொல்லியல் |
| 6. | கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் | முதுகலை வரலாறு, வரலாறு மற்றும் தொல்லியல், பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல், தொல்லியல் |
| 7. | அயல்நாட்டுத் தமிழ்க்கல்வி | முதுகலை - தமிழ் |
| 8. | மொழிபெயர்ப்பு | ஏதேனும் ஒரு மொழியில் முதுகலைப் பட்டம் (தமிழ் /ஆங்கிலம்) |
| 9. | அகராதியியல் | முதுகலை தமிழ் |
| 10. | சமூக அறிவியல் | முதுகலை (சமூகவியல்)<br>முதுகலை (சமூகப்பணியியல்)/முது சமூகப்பணியியல் |
| 11. | அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சி | முதுகலை தமிழ்<br>முதுநிலை - அறிவியல் |
| 12. | கல்வியியல் | கல்வியியல் (M.Ed.,) |
| 13. | இலக்கியம் | முதுகலை (தமிழ்) |
| 14. | மொழியியல் | முதுகலை (மொழியியல்) / (தமிழ் / ஆங்கிலம்) |
| 15. | மெய்யியல் | முதுகலை(தத்துவம் / சமயம்/சைவசித்தாந்தம்/ வைணவம்/ இந்தியப் பண்பாடு/சுற்றுலாவியல்/ திருக்கோயில் நிர்வாகவியல்/ யோகா/ பிற தத்துவம் சார்ந்த பாடங்கள்) |
| 16. | நாட்டுப்புறவியல் | முதுகலை (தமிழ்/ நாட்டுப்புறவியல்) |
| 17. | இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப்பள்ளி | முதுகலை தமிழ் / ஆங்கிலம் |
| 18. | சித்த மருத்துவம் | சித்த மருத்துவம், உயிர் வேதியியல், பண்டுவ உயிர் வேதியியல், மருந்தியல், மருந்தாக்க அறிவியல், மருத்துவ தாவரவியல், மூலிகை அறிவியல், உயிர் நுட்பவியல் |
| 19. | தொல்லறிவியல் | முதுகலை (தாவரவியல்) |
| 20. | தொழில் மற்றும் நில அறிவியல் | முதுஅறிவியல் - புவியியல், நிலஅறிவியல் |
| 21. | சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் | சுற்றுச்சூழல் அறிவியல், மூலிகை அறிவியல், தாவரவியல், விலங்கியல் |
| 22. | கணிப்பொறி அறிவிமில் | முது அறிவியல் (கணிப்பொறி அறிவியல் / தகவல் தொழில் நுட்பம்)/M.C.A. அல்லது முதுஅறிவியல் (கணிதம்/இயற்பியல் / PGDCA உடன் கூடிய புள்ளியியல்) |
| 23. | நூலக அறிவியல் | நூலக அறிவியல் |

## கல்வித்தகுதி

# உயர் கல்வித்துறை மற்றும் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிகளின்படி 10+2+3+2 (அல்லது) 11+1+3+2 கல்விப் படிநிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் படித்தவராக இருத்தல் வேண்டும்.

# பட்டியல் / பழங்குடி வகுப்பினர் குறைந்தது 50% (விழுக்காடு) மதிப்பெண்கள் முதுநிலை பட்டப்படிப்பில் பெற்றிருத்தல் வேண்டும்.(சான்றொப்பம் பெற்ற உரிய சாதிச்சான்றிதழ் இணைத்தல் வேண்டும்) பிற வகுப்பினருக்கு குறைந்தது 55% (விழுக்காடு) பெற்றிருக்கவேண்டும்.

# அரசு/அரசு உதவிபெறும் பள்ளி/கல்லூரிகளில் 2 ஆண்டு பணியனுபவத்துடன் பணியாற்றும் ஆசிரியர்களே விண்ணப்பிக்க தகுதியுடையவராவார்.

## விண்ணப்பங்கள்

தமிழ்ப் பல்கலைக்கழக இணையதள முகவரியான www.tamiluniversity.ac.in மூலம் விண்ணப்பங்களைப் படியிறக்கம் செய்து, விண்ணப்பக் கட்டணமாக ரூ.500/-க்குப் பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் என்ற பெயரிலான வங்கி வரைவோலையுடன் பல்கலைக்கழகத்திற்கு நிறைவு செய்த விண்ணப்பத்தினை அனுப்பிவைக்க வேண்டும்.

## விண்ணப்பங்கள் நிறைவு செய்தல்

மேற்குறித்த படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் விண்ணப்பங்களைச் சரியாக நிறைவு செய்து குறிக்கப்பட்ட இறுதி நாட்களுக்கு முன்பாக பல்கலைக்கழக அலுவலகத்திற்கு நேரிலோ, அஞ்சல் வழியாகவோ வந்து சேருமாறு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிச்சான்றிதழ், மாற்றுச்சான்றிதழ், சாதிச்சான்றிதழ் பணியனுபவச்சான்றிதழ் அவற்றின் ஒளிப்பட நகலை சான்றொப்பம் இட்டு இணைத்து அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்தல் கூடாது.

## நுழைவுத்தேர்வு மற்றும் சேர்க்கை

பல்கலைக்கழகத்தாரால் நுழைவுத்தேர்வு நடத்தப்பெறும். நுழைவுத்தேர்வு 100 வினாக்கள் கொண்ட பல்விடைத் தெளிதலாக (Multiple Choice) அமைந்திருக்கும். நுழைவுத்தேர்வு நடைபெறவுள்ள நாள், நேரம், இடம் ஆகியன தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்களுக்கு அறிவிக்கப்பெறும். நுழைவுத்தேர்விற்கு வராதவர்களைத் தெரிவு செய்ய இயலாது. தகுதியின் அடிப்படையிலும் தமிழக அரசு அறிவித்துள்ள இனவாரிச் சுழற்சி முறை அடிப்படையிலும் மாணவர்கள் சேர்க்கை முடிவு செய்யப்பெறும்.

## படிப்புகாலம்

அ. கோடை விடுமுறையில் 30 நாட்கள் தொடர் வகுப்புகளாகவும் பிற விடுமுறை நாட்களில் 15 நாட்கள் ஆய்வு நெறியாளருடன் கலந்துரையாடல் நிகழ்வாகவும் நடைபெறும்.

ஆ. பகுதி-I தேர்வு டிசம்பர் திங்களில் நடைபெறும். ஆய்வேடு அடுத்த ஆண்டு ஜீலை மாதத்திற்குள் அளிக்க வேண்டும். காலதாமதமாக ஆய்வேடு சமர்ப்பிக்க வேண்டியிருந்தால் பல்கலைக்கழகம் நிர்ணயிக்கும் தண்டத்தொகையினை செலுத்த வேண்டும்.

## கல்விக்கட்டண விவரம்

| வ. எண் | கட்டண விவரம் | ஆய்வியல் நிறைஞர் | |
|---|---|---|---|
| | | அறிவியல் | கலை |
| 01. | சேர்க்கைக் கட்டணம் | 20,200 | 15,200 |
| 02. | ஆய்வுநூல் கட்டணம் | 5000 | 5000 |
| 03. | தேர்வுக்கட்டணம் | 1400 | 1400 |

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி

பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-613 010.

விண்ணப்பங்கள் அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டிய இறுதி நாள்: 30.11.2017

**முனைவர்.ச.முத்துக்குமார்**
**பதிவாளர்**